புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் நகர, பேரூர்,

# ஒன்றிய பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை.பிப்.12-

100 நாள் வேலை ரத்து, விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த் க ஒப்பந்தம் நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்கணித்த ஒன்றிய பா.ஜ.க அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க வையும் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை விடுத்துள்ளார்!

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு

100 நாள் வேலையை ஒழிக்கும் திட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க ஒப்பந்தம், நிதி நிலை அறிக்கையில் தமிழ் நாட்டை புறக்கணித்து, தமிழநாட்டு வளர்ச்சியை தடுத்து வரும் ஒன்றிய பா.ஜ.க அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் இன்று(12.02.2026 வியா ழக் கிழமை) மாலை 4.00 மணியளவில் ஒன்றிய, நகர, பேரூர் தலைநகரங்களில் நடைபெற உள்ளது.

இதில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக உடன்பிறப்புக்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சி தோழர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

சேலம் மத்திய மாவட்டத்தில்

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா. இராஜேந்திரன் அறிக்கை!



சேலம், பிப்.12-

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க. அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து இன்று (12.02. 2026) முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சேலம் மாநகரம்- கோட்டை மைதானம்,ஓமலூர் கிழக்கு ஒன்றியம்-புளியம்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில்,ஓமலூர் வடக்கு ஒன்றியம்-வெள்ளாளப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில்,ஓமலூர் தெற்கு ஒன்றியம்-சிக்கம்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில். ஓமலூர் மேற்கு ஒன்றியம்- கோட்டக்கவுண்டம்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில்,காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம்- கூ.குட்டப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில், காடையாம்பட்டி மத்திய ஒன்றியம்-

குண்டுக்கல் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில், காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம்-

செம்மாண்டப்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில்,தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம்-

செம்மண்கூடல் ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில்,தாரமங்கலம் வடக்கு ஒன்றியம்-

அமரகுந்தி ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில்,சேலம் வடக்கு ஒன்றியம்-


மல்லமூப்பம்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் எதிரில்,கன்னங்குறிச்சி பேரூர்-கன்னங்குறிச்சி தபால் நிலையம் அருகில்,கருப்பூர் பேரூர்-கருப்பூர் தண்ணீர்தொட்டி அருகில்,ஓமலூர்பேரூர்- பேரூராட்சி அலுவலகம் எதிரில், காடையாம்பட்டி பேரூர்- ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இரோஜந்திரன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க.வையும் துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# கோவை வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிவிப்பு!



கோவை, பிப்.13-

ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்து தொடர்ந்து வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க.வையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கோவை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியினர் பங்கேற்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (12.02.2026) கீழ்க் கண்ட இடங்களில் நடைபெறும் என மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கோவை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் விவரங்கள்.

கவுண்டம்பாளையம் மற்றும் தொண்டாமுத்தூர் தொகுதிகளுக்கு உட்பட்ட மாநகராட்சியில் 85 வட்டக் கழகத்தை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் கோவை, டாட்டாபாத், பவர் ஹவுஸ் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத் திடலில் நடைபெறுகிறது.

ஒன்றியம், நகரம், பேரூர் கழகங்கள் சார்பில் தொகுதி வாரியாக:

தொண்டாமுத்தூர் தொகுதி :

தொண்டாமுத்தூர் வடக்கு ஒன்றியம் (5 ஊராட்சிகள்), தொண்டாமுத்தூர் பேரூர், தாளியூர் பேரூர், வேடப்பட்டி பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் குளத்துப்பாளையம் BSNL அலுவலகம் முன்பு நடைபெறுகிறது.

தொண்டாமுத்தூர் கிழக்கு ஒன்றியம்,

(தொண்டாமுத்தூர் வடக்கு ஒன்றியத்தில்) இக்கரைபோளுவாம்பட்டி ஊராட்சி, மத்வராயபுரம் ஊராட்சி, பேரூர் பேரூர், தென்கரைப் பேரூர், பூலுவபட்டி பேரூர், ஆலந்துறை பேரூர் கழகத்தை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் ஆலந்துறை தபால் நிலையம் முன்பு நடைபெறுகிறது.

கவுண்டம்பாளையம் தொகுதி :

சர்க்கார்சாமகுளம் ஒன்றியம், சர்க்கார்சாமகுளம் பேரூர், இடிகரை பேரூர் கழகத்தை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் இடிகரை IOB வங்கி எதிரில் நடைபெறுகிறது.

பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றியம், பெரியநாயக்கன்பாளையம் பேரூர், நரசிம்மநாயக்கன் பாளையம் பேரூர் கழகத்தை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் பெரியநாயக்கன்பாளையம் BSNL அலுவலகம் எதிரில் நடைபெறுகிறது.

பெரியநாயக்கன்பாளையம் மேற்கு ஒன்றியம் மற்றும் பெரியநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றிய கழகத்தைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் பன்னிமடை தபால் நிலையம் முன்பு நடைபெறுகிறது.

மேட்டுப்பாளையம் தொகுதி:காரமடை வடக்கு ஒன்றியம், காரமடை கிழக்கு ஒன்றியம் மற்றும் சிறுமுகை பேரூர் கழகத்தை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் சிறுமுகை தபால் நிலையம் முன்புறம் நடைபெறுகிறது.

காரமடை மேற்கு ஒன்றியம் மற்றும் காரமடை தெற்கு ஒன்றிய கழகத்தைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் வெள்ளியங்காடு SBI வங்கி எதிரில் நடைபெறுகிறது.

மேட்டுப்பாளையம் வடக்கு நகரம் மற்றும் மேட்டுப்பாளையம் தெற்கு நகரக் கழகத்தை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் மேட்டுப்பாளையம், கோவை சாலையில் அமைந்துள்ள தபால் நிலையம் முன்புறம் நடைபெறுகிறது. காரமடை நகரக் கழகத்தைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில்கா ரமடை தபால் நிலையம் முன்பு நடைபெறுகிறது.

கூடலூர் நகரம் மற்றும் வீரபாண்டி பேரூர் கழகத்தை சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொள்ளும் வகையில் கூடலூரில் நடைபெறுகிறது.

மேற்கண்ட இடங்களில் நடைபெறும் இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளும்படி தொண்டாமுத்தூர் அ. ரவி கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஈரோட்டில் மஞ்சளுக்கான மண்டல அலுவலகம் மற்றும் ஆய்வகம் அமைப்பதில் இரட்டை வேடம்!

## மஞ்சள் விவசாயிகளை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு – கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



புதுடெல்லி, பிப்.12-

இந்தியா அளவில் மஞ்சள் உற்பத்தியில் முன்னணி இடமும், தமிழ்நாடு அளவில் முதல் இடமும் வகிக்கும் சிறப்பு பெற்றது ஈரோடு மாவட்டம். இங்கு ஆண்டுக்கு 1.25 லட்சம் டன்களுக்கு மேல் மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், ஈரோடு மஞ்சள் புவிசார் குறியீடும் பெற்றுள்ளது.

இத்தகைய ஈரோட்டில் மஞ்சள் வாரிய மண்டல அலுவலகம் மற்றும் ஆய்வகம் அமைப்பது தொடர்பான கேள்வியை, நாடாளுமன்றத்தில் மீண்டுமொரு முறை ஒன்றிய அரசிடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கேள்வி எழுப்பியிருந்தார். இதில் மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்குவது குறித்தும் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதில்கள், தனித்துவமும் உயர்ந்த ஈரோட்டு மஞ்சளை அவர்கள் தரக்குறைவாக ஈரோடு உள்ளிட்ட தமிழ்நாட்டு மஞ்சள் புகழும் பெற்ற அணுகுவதையும், விவசாயிகளுக்கு திட்டமிட்டு ஓரவஞ்சனை இழைப்பதையும் வெளிக்காட்டியுள்ளன.

**ஒன்றிய அரசின் இரட்டை வேடம்**

ஈரோடு மக்களின் பிரதிநிதியாக, ஒன்றிய அரசின் இந்த அகம்பாவத்தை வன்மையாக கண்டிக்கிறேன்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலில், “ஈரோட்டில் மஞ்சள் வாரியத்தின் மண்டல அலுவலகம் மற்றும் ஆய்வகம் அமைப்பது பரிசீலனையில் மட்டுமே உள்ளது” என்று தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் ஈரோட்டுக்கு வருகை தந்த ஒன்றிய வேளாண் அமைச்சர் சிவராஜ்சிங் சௌகான் அவர்கள், “ஈரோட்டில் விரைவில் தேசிய மஞ்சள் வாரியத்தின் மண்டல அலுவலகம் மற்றும் சர்வதேச தரத்திலான ஆய்வகம் அமைக்கப்படும்” என்று அறிவித்தார். ஆனால், தற்போது ‘அது உறுதியல்ல, பரிசீலனையில் மட்டுமே உள்ளது’ என்று கூறியுள்ளது ஒன்றிய அரசு.

இது ஒன்றிய அரசு ஆடும் இரட்டை வேட நாடகம் மட்டுமே.

**உதவாத நறுமணப் பொருட்கள் வாரியம்**

“ஈரோட்டில் ஏற்கனவே நறுமணப் பொருட்கள் வாரியத்தின் (Spices Board) அலுவலகம் இருக்கிறது” என்று பதிலளித்து, புதிய மஞ்சள் வாரிய மண்டல அலுவலகத்தையும் ஆய்வகத்தையும் தவிர்க்க முயல்கிறது ஒன்றிய அரசு. ஆனால், நறுமணப் பொருட்கள் வாரியம் ஈரோடு மஞ்சள் விவசாயிகளுக்கு எவ்விதப் பயனும் அளிக்கவில்லை என்பதே நடைமுறை உண்மை.

இந்த நறுமணப் பொருட்கள் வாரியம் பெரும்பாலும் ஏலக்காய், மிளகு, மிளகாய் போன்ற பயிர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கிறது. மஞ்சளுக்கான பிரத்யேகத் தேவைகளை அது துளியும் பூர்த்தி செய்வதில்லை. மிக முக்கியமாக, ஈரோட்டில் உள்ள மசாலா வாரிய அலுவலகத்திற்குச் சுயமாக முடிவெடு க்கும் அதிகாரமும் கிடையாது. இந்த அதிகாரம் கொச்சி தலைமை அலுவலகத்திற்கே உள்ளது.

இப்படி நறுமணப் பொருட்கள் வாரியத்தை, மஞ்சள் அமைப்புகளுக்கு நிகராக நிறுத்தி ஒன்றிய அரசு பேசுவது, ஈரோட்டு மஞ்சள் விவசாயிகளின் நெஞ்சில் குத்தும் செயல்.

**மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய அங்கீகாரம் இல்லை**

தேசிய மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய அங்கீகாரம் வழங்குவது குறித்தும், ஒன்றிய அரசு தெளிவற்ற பதில்களையே அளித்துள்ளது.

பொதுவாக, பயிர்களுக்கு வாரியம் அமைக்கையில், அதிக உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு (Principal Growing States) முன்னுரிமை அளிக்க வேண்டும். இதற்கு உதாரணமாக, தேயிலை வாரியம், காஃபி வாரியம் ஆகியவற்றைக் குறிப்பிட லாம். ஆனால், மஞ்சள் வாரியத்தை அமைத்தபோது, தமிழ்நாடு அதில் முக்கியத்துவம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே, ‘சுழற்சி முறை’ என்ற நாடகத்தை அரங்கேற்றியது ஒன்றிய அரசு.

தற்போது இந்த சுழற்சி முறையிலும், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை.

ஒன்றிய அரசு தனது மழுப்பலான பதில்களையும், இரட்டை வேட அரசியலையும் நிறுத்திக் கொண்டு, ஈரோட்டிற்கு விரைவில் மஞ்சள் வாரிய அலுவலகம் மற்றும் ஆய்வகத்தை கொண்டுவர வேண்டும். தேசிய மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய அங்கீகாரத்தையும் வழங்க வேண்டும்.

அதுவரை நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் எமது குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

## கழக சட்டதிட்ட விதி : 18, 19 மற்றும் 31-ன்படி

# தலைமைக் கழக நிர்வாகிகள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு

**தி.மு.க. செய்தித் தொடர்பு துணைத் தலைவராக திரு.ஏ.சுப்புரத்தினம்**, முன்னாள் எம்.எல்.ஏ., (எச்-16, ஆர்.எம்.காலனி, திண்டுக்கல்) அவர்களும்,

**தி.மு.க. வர்த்தகர் அணி துணைச் செயலாளர்களாக**

**திரு. பி.டி.செல்வகுமார்** (மணியா நகர், கொட்டாரம், கன்னியாகுமரி மாவட்டம்) **திரு. ஜெ. பாலகங்காதரன்.** முன்னாள் எம்.எல்.ஏ., (1/98, ஆலமரத்துப்பட்டி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்) ஆகியோரும்;

தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளராக **திரு. ஆர்.சுரேஷ்குமார்** (திருச்செங்கோடு, நாமக்கல்) அவர்களும்;

தி.மு.க. சுற்றுச்சூழல் அணி துணைச்செயலாளராக **திரு. சங்கர் தருமன்** (புங்கம்பட்டி, சாப்பாத்தி, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்களும்;

தி.மு.க. சட்டத்துறை துணைச் செயலாளராக **திரு. ஜெயக்குமார்** ( மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி, மதுரை மாவட்டம்) அவர்களும்;

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளராக **திரு.என். சிவக்குமார்** (13/5, விவேகானந்தர் 2வது தெரு, மதிச்சியம், மதுரை 625 020.) அவர்களும்;

**தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமை பிரிவு மாநில துணைச் செயலாளராக திரு.எஸ். ஷேக் இஸ்மாயில்** (73/4, ஆதம் தெரு, அன்சாரி நகர் 7வது தெரு, மகபூப்பாளையம், மதுரை 625 016.) **அவர்களும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.**

ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 10.02.2026. தி.மு.க.

அமைச்சர் கே.என்.நேரு தலைமை! கே.கே.செல்லப்பாண்டியன் வரவேற்புரை!

# மாத்தூர் எம்.பாலச்சந்தர்-எம்.பாலமுருகன் இல்ல மண விழா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி-சிவ.வீ.மெய்யநாதன்-முன்னணியினர் வாழ்த்து!



புதுக்கோட்டை, பிப்12-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நல்லாசியுடன் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ஆசீர்வாதத்துடன், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துக்களுடன் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுக்கா, மாத்தூர் கிராமம் முன்னாள் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மாத்தூர் எம்.பாலச்சந்தர், அரசு ஒப்பந்தக்காரர் மாத்தூர் எம்.பாலமுருகன் சகோதரர் எம்.நாகரெத்தினம் எஸ்.பிரியதர்ஷினி ஆசியோரது திருமணம் நாளை (13.02. 2026-வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் மாத்தூர் ஆர்.எஸ்.வி திருமண மஹாலில் கழக முதன்மை செயலாளர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் வரவேற்புரையாற்றுகிறார்இயற்கை வளங்கள் துறை அமைச்சர், தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி, தமிழ்நாடுபிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சிவ.வீ.மெய்யநாதன், பெரியண்ணன் அரசு, . எம்.எம்.அப்துல்லா, கவிச்சுடர் கவிதைப்பித்தன், நா.இளையராஜா டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, மேயர் மு.அன்பழகன், காஜாமலை விஜய், கார்த்திக் தொண்டைமான், தென்னலூர் எம். பழனியப்பன், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, சு.சண்முகம், பி.டி. அரசகுமார், புதுகை விஜயா, டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை, பரணி இ.ஏ.கார்த்திகேயன், உதயம் சண்முகம், மேயர் திலகவதி செந்தில், கே.ஆர்.என். போஸ், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், அரு.வீரமணி, மு.பி.மணி, வி.என்.மணி, சுப.சரவணன், செ.அசோக் பாண்டியன், எஸ்.எஸ். கருப்பையா,க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, கீரை. தமிழ் ராஜா, செந்தாமரை பாலு, ஆர். ஆர்.கே.கலைமணி,

வே.ராஜேஷ், முத்துச் செல்வம், துரைராஜ், ஜி.முருகேசன், கே.எஸ்.சந்திரன், மு.பி.ம.சத்தியசீலன், அ.இளங்குமின்,கே.பி.அய்யப்பன்,ஆர்.ஆர்.எஸ்.மாரி முத்து,

சி.சண்முகம், எம்.பரமசிவம், ஓ.எஸ்.வெங்கடாஜலம், வெ.முத்துக்கிருஷ்ணன், என்.சேட்டு, சி.சண்முகம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உறவினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்தில், தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை விரிவுபடுத்தி தொடங்கி வைத்ததையடுத்து, கரூரில் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி சின்ன கொங்கு மன்றத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து உணவு பரிமாறினார். அருகில் ஆட்சியர் மீ. தங்கவேல், மேயர் கவிதா கணேசன், ஆணையர் சுதா, மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ், அன்பரசன், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை மத்திய மாவட்டம், பூதலூர் வடக்கு ஒன்றியம், திருக்காட்டுப்பள்ளி பேரூரைச் சேர்ந்த த.திருஞானசம்பந்தம் – ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம், ஆம்பலாபட்டு வடக்கு கிராமத்தைச் சேர்ந்த சி.நேதாஜி – திருவையாறு வடக்கு ஒன்றியம், திருவையாறு பேரூரைச் சேர்ந்த மு.திபேஷ்பிரபா ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 10.02.2026. தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருச்சி மா. பாலகிருஷ்ணன்

**பிப்ரவரி 12 (2010)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டக் கழகப் பொருளாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**புரவலர் அன்பிலாருடன் இணைந்து பணியாற்றி பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**திருச்சி நகர்மன்றத் தலைவராக திறம்பட பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தி.மு.க. சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக வாழ்நாளின் இறுதிவரை இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**